REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

PATHUKAVALAN

மலர் 124

இதழ் 18

15 கார்த்திகை 1999

விலை ரூபா 5

# இலங்கையில் தற்கொலை மரணம் யாழ்ப்பாணத்திலேயே அதிகமாகும்

### புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் வைத்திய கலாநிதி செ. நாச்சினார்க்கினியன்

"எத்தனையோ இளைஞர்களும் யுவதிகளும் காணாமல்போயும் போரில் மரணித்தும் நாட்டைவிட்டு வெளியேறியும் இன்னும் இலங்கையில் தற்கொலை மரணவீதம் யாழ்ப்பாணத்திலேயே 'அதிகமாக இருக்கிறது" என யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் வைத்திய கலாநிதி செல்லையா S. நச்சினார்க்கினியன் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## யேசுக் கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர் புதிய வாழ்வின் அப்பம்

47வது சர்வதேச நற்கருணை மகாநாடு

*உரோமை 18–25 யூன் 2000*

2000 யூபிலி ஆண்டு ஆழ்ந்த நற்கருணை ஆண்டாகும்.

தொடர் கட்டுரைகள் வெளிவருகின்றன.

## திருத்தந்தையின் இந்திய விஜய எதிர்ப்பு அரசியல் நோக்கமே

இந்தியாவில் நடந்த கட்டாய மதமாற்றத்திற்கு இந்திய மண்ணில் திருத்தந்தை மன்னிப்புக்கோர வேண்டுமென கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கங்கள் திட்டமிட்ட பிரச்சாரம் நடத்தின. திருத்தந்தையைச் சந்திக்கவிருந்த குடியரசுத்தலைவருக்கும் பிரதமருக்கும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## போரை உடனே நிறுத்தவும்

### நீதி சமாதான ஆணைக்குழு ஜனாதிபதிக்கு மகஜர்

போரை நிறுத்திப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு ஜனாதிபதிக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது.

"நாம் இதற்கு முன்னரும் பல மகஜர்களை அனுப்பியுள்ளபோதிலும் இப்போது இக் கடிதத்தை அனுப்புவது நூற்றுக்கணக்கான சிங்களப் படைவீரர் உட்பட பெருந்தொகையான இளைஞர்கள் வன்னிப் பகுதியில் நடந்த போரில் கொல்லப்பட்டமையால் உண்டான கவலையினாலாகும்.

சிங்கள வீரர் பலர் கொல்லப்பட்டுள்ள இந்நேரத்தில் நாம் தமிழராயிருந்த போதிலும் சமாதானத்திற்காக இவ்வேண்டுகோளை விடுப்பது நாம் அரசியல் இலாபத்தையோ நட்டத்தையோ கருதவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

உயிர்களைப் பலிகொள்வதுடன் நாட்டையும் சீரழிக்கும் முடிவற்ற அர்த்தமற்ற போரைப் பற்றியே நாம் கவலை கொண்டுள்ளோம்" என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிக்கு நவாலி மக்கள் மகஜர்

### நவாலி புனித இராயப்பர் தேவாலயம் மீதான தாக்குதல் பற்றிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கருத்துக்குக் கண்டனம்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பாராளுமன்றத்தில் புதுக்குடியிருப்பில் அப்பாவி மக்கள் 22 பேர் கொல்லப்பட்டது பற்றிய கேள்வி எழுப்பப்பட்டபோது வெளியிட்ட நவாலித் தேவாலயம் மீதான தாக்குதல் பற்றிய கருத்தை நவாலி வாழ் மக்கள் வன்மையாகக் கண்டித்தே மேற்படி மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கடந்த பத்து ஆண்டுகளில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் எமது சிறார்களே

*~பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருள்திரு ஏ. ஐ. பேணாட்*

"முன்னொரு காலத்தில் யாழ் மக்களின் எழுத்தறிவு, கல்வியில் பங்குகொள்ளுதல், கல்வியில் சாதனைகள் என்பன பற்றி நாம் பெருமைப்படக் கூடியதாய் இருந்தது. ஆனால் இன்று சிறார்களில் 13.3% இடம்பெயர்ந்தும், 1.9% பாடசாலையில் பதிவுசெய்யாமலும், 17.1% ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லாமலும், மேலும் 20.1% பாடசாலையிலிருந்து இடைவிலகியும் உள்ளனர். தமது குடும்பத்தின் உய்விற்காக உழைப்பதே இவ்வாறு இடைவிலகுவதன் முக்கிய காரணமாகும்" என, தமது அதிபர் அறிக்கையில் பேணாட் அடிகள் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## புதிய நூற்றாண்டில் பணிக்கு விரைவோம்

### யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு இயக்குனர் ஆர். எச். சகாயநாயகம் அடிகள்

"யாழ் மறைமாவட்டத்தின் பொதுநிலையினர், புதிய நூற்றாண்டில் பணிக்கு விரைவோம் என்ற அழைப்புடன் தம்மைத் தயாராக்கி செயலாற்ற முனைவது பாராட்டப்பட வேண்டியதே. உலகிலிருக்கும் பொதுநிலையினர் உலகைப் புனிதப்படுத்தவும், கிறிஸ்தவ விழுமியங்களை நினைவூட்டும் கருவிகளாக எப்போதும் சான்றுபகர்ந்து, தங்களுக்கே உரித்தான பணியை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லவேண்டும்" என பொதுநிலையினர் தினத்திற்கான தமது செய்தியில் இயக்குனர் ஆர். எச். சகாயநாயகம் அடிகள் தெரிவித்தார்.

பொதுநிலையினர் சிறப்பு மலரை இரண்டாம் பக்கத்தில் காணலாம்.

## இரு தரப்பாரும் ஒருவரையொருவர் நம்பாவிட்டால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தானே நடுவழியாகும்

### –இலங்கை இராணுவத்தின் பொன்விழாவில் பேராயர் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை

"துரதிஸ்டவசமாக இலங்கை நாடு தானே ஏற்படுத்திக்கொண்ட ஒரு போரில் சிக்கிக் கிடக்கிறது. போரில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு தோட்டாவும், குண்டும், கண்ணிவெடியும் எமது நாட்டைச் சேர்ந்த ஒரு சகோதரனையோ சகோதரியையோ கொல்கிறது அல்லது காயப்படுத்துகிறது".

இவ்வாறு இலங்கை இராணுவத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி காலிமுகத்திலுள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையின் போது கொழும்புப் பேராயர் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

"இது ஒரு அறிவற்ற செயலானால் அதைத் தொடரும் நாமெல்லாம் அறிவற்றவர்கள் அல்லவா? என்னவிலை கொடுத்தும் போரை நடத்தத்தான் வேண்டுமா? எத்தனையோ போர் வீரர்களின் உயிரையும் பொதுமக்களின் உயிரையும் பலியாகக் கொடுத்து இப்போர் நடத்தப்பட வேண்டுமா?" என்று கேள்வி எழுப்பி "சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மற்றொரு சந்தர்ப்பம் அளித்தால் என்ன? கடந்த கால அனுபவங்களின் காரணமாக இரு பக்கத்தாரும் ஒருவரையொருவர் நம்பமுடியாவிட்டால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்தானே நடுவழியாகும். இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதில் முக்கிய இடையூறாக இருப்பது அகம்பாவமே. அதனைக் களைந்து, தீர்வுக்காக அனைவரும் உழைக்கவேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நூற்றாண்டில் பணிக்கு விரைவோம்

## பொதுநிலையினர் தினம் – கிறிஸ்து அரசர் பெருவிழா 21.11.99

## எம் கருத்து

### நற்பண்புகளோடு கூடிய கல்வி

இலங்கையிலே யாழ்ப்பாணத்தில்தான் தற்கொலை மரண வீதம் இன்று அதிகமாக இருக்கின்றது என வைத்திய கலாநிதி செல்லையா S. நச்சினார்க்கினியன் புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்புவிழாவில் தெரிவித்துள்ளார்.

வன்செயல்கள், மரணங்கள், கொலைகள், தற்கொலைகள் என்பன எல்லாம் இப்போது நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குவதேயில்லை. அவையெல்லாம் எம் அன்றாட சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன.

வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் இவையெல்லாம் அநேகமாக இளைஞர்களால் இளைக்கப்படுவதாகும். எத்தனையோ இளைஞர்களும் யுவதிகளும் காணாமல்போயும் போரினால் மரணித்தும் நாட்டைவிட்டு வெளியேறியும் உள்ளனர். இன்று தற்கொலை மரண வீதம் யாழ்ப்பாணத்தில் அதிகமாய் உள்ளதற்கு தோல்வியைத் தாங்கமுடியாது, மற்றவர்களின் மாறுபட்ட கருத்துக்களை சகித்துக்கொள்ள இயலாது, குறைந்த மதிப்பீட்டை பொறுத்துக் கொள்ளமுடியாது போன்ற மனநிலைகளே காரணம் என வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடந்த சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி, கூட்டத்தினரில் ஒரு பகுதியினர் விளையாடிய மாணவர்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடும் என்ற அபிப்பிராயத்தில் அதிபர்களால் நிறுத்த வேண்டியிருந்ததை நல்ல உதாரணமாக வைத்திய கலாநிதி சுட்டிக்காட்டினார்.

இளைஞர்கள் இயல்பாகவே நல்லவர்கள். அவர்கள் இலட்சியவாதிகள். துடிப்போடும் துணிவோடும் சவால்களைச் சந்திக்கவும், சரித்திரம் படைக்கவும் விரும்புகிறவர்கள்.

ஆனால் இன்று இளைஞர்கள் மத்தியில் கட்டுப்பாடு குன்றிக் குழப்பமும் குறைபாடுகளும் ஏற்படப் பல காரணங்கள் உ...ண்டு.

பொதுவான வகையில் சமய பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டு விழுமியக் கல்வியின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டபோதே வன்செயல்களுக்கு அடியிடப்பட்டதாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மனித வாழ்வுக்குத் தேவையான அடிப்படை ஒழுக்க முறைகள், விழுமியங்கள், மனித மாண்பு, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற நல்ல பண்புகளோடு கூடிய கல்வி அருகியே வந்துள்ளது.

குறிப்பான வகையில் கடந்த இருபது ஆண்டுகளாகக் கொடிய போரும் ஆயுதக் கலாசாரமும் சுதந்திரம், சமாதானம், சுபீட்சம், என்பவற்றையல்ல மாறாக பழிவாங்கல், பயங்கரவாதம், இழப்புக்கள், இடம்பெயர்வுகள், இறப்புக்கள், கொலைவெறி என்பவற்றையே ஊட்டியுள்ளது.

பாடசாலைக் கல்வியை பரிட்சையையும் பட்டத்தையும் நோக்கி அமைக்காமல் விழுமியங்களையும் சமய அடிப்படைகளையும் கொண்டதாக மாற்றியமைக்கவேண்டும். பெற்றோர், பெரியோர், அதிபர், ஆசிரியர்கள் தம் போதனையையும் அறிவுரையையும் வாழ்ந்து வழிகாட்ட வேண்டும்.

## தலத்திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு அடித்தளம் இடும் கடப்பாட்டைச் சுமக்கிறீர்கள்

### யாழ் ஆயரின் ஆசிச் செய்தி

2000 ஆண்டுக்குள் காலடி வைக்கின்ற இறைமக்களின் இரட்சணிய வரலாற்றில் பொதுநிலையினரின் பணியும், அழைப்பும் புதுப்பரிமாணம் பெறுகின்றது. வழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்து உலகின் அரசர் விழாவைக் கொண்டாடும் வேளையில் பொதுநிலையினர் தினமாக அனைத்துத் திருச்சபையும் நினைவுகூருவது சாலப்பொருத்தம் என எண்ணுகிறேன்.

இறைபணிப் புலத்தில் பொதுநிலையினர், குருக்களின் இடதுகரமாகவும் வலதுகரமாகவும் பணிபுரிகின்றார்கள் என்ற தவறான கண்ணோட்டத்தை நீக்கி, நாம் அனைவரும் பெற்றுக்கொண்ட திருமுழுக்கினால் பணிக்கு ஒரே அழைப்பைப் பெற்றுள்ளோம் என்ற புதிய சிந்தனை ஊற்றை இறைவார்த்தையின் அடிப்படையில், 2ஆம் வத்திக்கான் சங்கம் பொதுநிலையினரின் பணிபற்றி தெளிவான கண்ணோட்டத்தை முன்வைத்தது. இதன் பின்னணியில் திருத்தந்தை வெளியிட்ட Christi Fideles என்ற மடலும் பொதுநிலைப்பணியின் வீச்சத்தை ஆழமாக்கியது.

எமது மறைமாவட்டத்தில் சிலகால இடைவெளியின் பின் மறைமாவட்டப் பொதுநிலையினர் ஆணைக்குழு மீண்டும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. பரந்துபட்ட பணிச்சிந்தனைகளுக்கும், தலத்திருச்சபையின் தலைமைத்துவத்திற்கும் அடித்தளம் இடும் பாரிய கடப்பாட்டைச் சுமக்கிறீர்கள். எமது விசுவாசத்தின் மையமாக யேசுக்கிறிஸ்துவின் மீட்பின் 2000 வருடங்களை நினைவுகூரும் விதத்தில் யூபிலி ஆண்டாகக் கொண்டாடும் இவ்வேளையில் பொதுநிலைப்பணி எமது மறைமாவட்டத்தில் உத்வேகம் காணவேண்டும்.

பொதுநிலையினர் தினத்தைக் கொண்டாடும் இவ்வேளை எமது திருமுழுக்கினால் பணிக்கு அழைப்புப் பெற்றுள்ளோம் என்பதை உணர்ந்து பங்காளிகளாகப் பணி செய்ய பரந்த இதயத்தோடு பொதுநிலை ஆண்களும் பெண்களும் முன்வரவேண்டும்.

உங்களுக்குக் கிறிஸ்து யேசுவில் எனது ஆசிகள்.

இறைபணியில் உங்கள் ஆயர்,
பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்.

## மூன்றாவது மிலேனியத்தில் பொதுநிலையினரின் பொறுப்புக்கள்

~அருள்திரு ஜே. நீக்கிலஸ்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் (1962) முடிவுற்று முப்பத்தேழு வருடங்களாகியும் திருச்சபையிலே பொதுநிலையினரின் பங்களிப்பு, ஈடுபாடு, பணி, பொறுப்புக் கள் போதியளவு உணரப்படாமலும் ஏற்கப்படாமலும் இருக் கும் நிலை நீடித்துவருகின்றது. இந்நிலைக்கு அமைப்புத் திருச்சபையும் காரணமாயுள்ளது. இங்கு பொதுநிலையினரின் முக்கியமான பணிகளில் ஒன்றான நற்செய்தி அறிவிப்புப் பணியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன்.

"எத்திசைக்கும் சென்று நற்செய்தியைப் போதியுங்கள்" என்ற நம் ஆண்டவர் இயேசுவின் பணிப்புரை குருக் கள். துறவியருக்கு மட்டும் உரியதல்ல. இது பொதுநிலை யினரின் பொறுப்பான பணிகளில் ஒன்றாக விளங்கிவரு கின்றது என பல இடங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். "எங்கெங்கு முடியுமோ அங்கங்கெல் லாம் பொதுநிலையினர் நற்செய்தியைப் பறைசாற்றி கிறிஸ் தவப் போதனையைப் பரப்பும் சிறப்பான பணியை நிறைவேற்றுவதில் திரு ஆட்சியாளரோடு இன்னும் அதிக அள வில் நேரடியாக ஒத்துழைக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். இதன் பயனாக அவர்கள் வளரும் இளம் திருச்சபைக்கு ஊக்கம் தருவார்கள்." (2ஆம் வத். சங்கம். மறை அறிவிப் புப் பணி எண். 21)

இன்று ஒருசில பொதுநிலையினரே இறைவார்த்தையில் தாகமுடையவர்களாக அதை வாசித்துப் பயன்படுத்துகின்றனர். பலருக்கு நற்செய்தி புரியாத புதிராக இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் இவர்கள் நற்செய்தியை எவ்வாறு அறிவிக்கமுடியும்? விவிலியத்தை அறிவியல் ரீதி யாக அணுகுவது அதிக பலனளிக்காது. ஆன்மீக அடிப் படையில் அன்றாட தியானத்திற்கும் செபத்திற்கும் வாழ்வுக் கும் பயன்படுத்துவதே சிறந்தது. அப்பொழுது இறைவார்த் தையை வாயினால் மட்டுமல்ல, வாழ்வாலும் போதிக்க முடியும்.

யாழ் மேய்ப்புப்பணி மாநாட்டில் (1994) குறிப்பிட்டுள்ளது போல "வார்த்தையாலும் வாழ்வாலும் நற்செய்திப்பணி பொதுநிலை விசுவாசிகளின் மறைத்தூதுப் பணியாக. உலகைக் கிறிஸ்து மயமாக்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. கிறிஸ்துவை நேரடியாகப் போதிக்கவும் கிறிஸ்துவுக்குத் தமது வாழ்வால் பகிரங்கமாகச் சான்று பகரவும் கிறிஸ்துவின் முப்பணிகளை தாம் வாழும் சூழலில் தமக்கே உரித்தான முறையில் ஆற்றவும் அவர்கள் அழைக்கப்படுகின்றனர்." (மேய்ப்புப்பணி ஏடு - பக். 101)

உதிக்கப்போகும் மூன்றாவது மிலேனியத்தில் பொதுநிலையினர் விழிப்புணர்வு கொண்டு தம்மை நற்செய்தி

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## உலகிலிருந்துகொண்டே உலகைப் புனிதப்படுத்த அழைக்கப்பட்டுள்ளீர்கள்

### இயக்குனரின் செய்தி

திருச்சபையில் பெரும்பான்மையானோர் பொதுநிலையினராவர். இவர்கள் திருமுழுக்கு வழியாக இறைமக்கள் கூட்டத்தில் இணைந்து திருச்சபையின் உறுப்பினராகின்றனர். மறுமலர்ச்சி கொணர்ந்த 2ஆம் வத்திக்கான் சங்கம் ஆரம்பித்து 37 ஆண்டுகள் உருண்டோடினாலும் சங்கத்தின் பொன்னான எண்ணங்கள், ஆழமான கருத்துக்கள் இன்னமும் அவர்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றப்படவில்லையென்பது கவலைக்குரிய விடயமாகும்.

யாழ் மறைமாவட்டத்தின் பொதுநிலையினர் "புதிய நூற்றாண்டில் பணிக்கு விரைவோம்" என்ற அறைகூவலுடன் தம்மை தயாராக்கி செயலாற்ற முனைவது பாரட்டப்பட வேண்டியதே.

2000ஆம் ஆண்டு யூபிலிக்கான ஆழமான புதுப்பித்தலை திருச்சபை வலியுறுத்தும் இக்காலகட்டத்தில் திருச்சபையோடு இணைந்து கூட்டுப் பொறுப்பாளர்களாகச் செயற்பட பொதுநிலையினர் அழைக்கப்படுகின்றனர். பங்கேற்கும் திருச்சபையாக மலரவேண்டுமென எதிர்பார்க்கும் பொதுநிலையினர் தமக்குரிய இடத்தையும், பணியையும், அழைப்பையும், ஈடுபாட்டையும் அறிந்து கிறிஸ்துவின் முப்பணிகளை உணர்ந்து செயல்படவேண்டிய அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

ஆதித் திருச்சபையில் ஆர்வத்துடன் நற்செய்திப் பணியிலும் பொதுப் பணியிலும் ஈடுபட்ட பொதுநிலையினர் போன்று இன்றும் திருச்சபையின் பணிகளில் ஈடுபட்டு உழைக்கும் பொதுநிலையினர் அதிகரிக்க வேண்டும்.

உலகின் மத்தியில் வாழும் பொதுநிலையினர்க்கு தனித்துவமான அழைப்பும் உண்டு. திருச்சபைக் கொள்கைத் திரட்டு ஏட்டில் கூறுவதுபோல உலகக் காரியங்களில் ஈடுபட்டு அவைகளை இறைவனின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் இறைவனின் அரசை அமைக்கத் தேடுவது தங்களின் அழைப்பால் பொதுநிலையினரைச் சார்ந்தது. இவ்வுலகில் அதாவது பல்வேறு வகையான உலக அலுவல்கள், வேலைகள், குடும்ப, சமூக வாழ்க்கை நிலைகள் ஆகியவற்றின் நடுவில் வாழ்கின்றனர். இங்குதான் இறைவனின் அழைப்பைப் பெறுகின்றனர். நற்செய்தி மனப்பான்மையால் வழிநடத்தப்பெற்று தங்களுக்குரிய அலுவலை ஆற்றுவதன் மூலம் அவர்கள் புளிக்காரம் போல, உலகிலிருந்துகொண்டே உலகைப் புனிதப்படுத்த அழைக்கப்பட்டுள்ளனர்(திருச்சபை எண். 31) என்பதை வலியுறுத்துகின்றது.

எனவே பொதுநிலையினரின் சிறப்புத் தினத்தை யாழ் மறைமாவட்டத்தில் நினைவுகூரும் இந்நாளில் உலகிலிருக்கும் பொதுநிலையினர் உலகைப் புனிதப்படுத்தவும், கிறிஸ்தவ விழுமியங்களை நினைவூட்டும் கருவிகளாக எப்பொழுதும் சான்றுபகர்ந்து உலகில் உப்பாக, ஒளியாகத் திகழ்ந்து தங்களுக்கே உரித்தான பணியை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்வார்களாக.

அருள்தரும் ஆண்டாம் புனித யூபிலி ஆண்டு நம்மை மிக வேகமாக நெருங்கிவருகின்ற இவ்வேளையில் பொதுநிலை விசுவாசிகள் தம் உரிமையையும் கடமையையும் உணர்ந்து திருச்சபையின் உலகளாவிய பணிவாழ்வில் ஈடுபட்டு இவ்வுலகில் இறையரசை நிறுவ திடசங்கற்பம் கொள்வார்களாக.

அருள்திரு சகாயநாயகம்,
இயக்குனர், யாழ் மறைமாவட்ட
பொதுநிலையினர் ஆணைக்குழு

## திருச்சபையில் பொதுநிலையினர் பங்கும் பணியும்

திருச்சபையின் பணிகள் அனைத்திலும் பொதுநிலையினர் பங்களிப்பு பயன்மிக்கதாகவும் பாரியதாகவும் அமைகிறது. "நீங்கள் தோர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர். அரச குருக்களின் கூட்டத்தினர். தூய மக்களினத்தின் அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே உங்களை இருளில் நின்று தம் வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி"(1பேதி. 2/9). "நற்செய்தியை அறிவித்து, மனிதரைப் புனிதப்படுத்தும் உலகியல் அமைப்பை நற்செய்தி மனப்பாங்கில் ஊடுருவி, நிறைவு செய்யவும் உழைக்கும்போது உண்மையான மறைத்தூதுப் பணி ஆற்றுகின்றனர்"(பொ.நி.ம.தூ. 1/2).

இன்று மக்கள் தொகைப் பெருக்கமும் அறிவியல் தொழில்நுட்பக்கலைகள் போன்றவற்றின் அதிகரித்த வேகமும் மக்களிடையே தொடர்பாடல் ஊடகங்களினால் ஏற்படும் உலகமயமாக்கல் போன்ற போக்கும் திருச்சபைப் பணித்துறைகளை விரிவாக்கியுள்ளது.

எனவே பொதுநிலையினரின் பங்கும் பணியும் திருச்சபையில் பயன்தரும் வகையில் பொலிவுடன் வளரவேண்டும். பொறுப்புக்கள் பலவும் பகர்ந்தளிக்கப்படவேண்டும். அவர்களுக்கு ஏற்ற பயிற்சியும் பக்குவமும் வழங்கப்படல் வேண்டும். மறைநூல், இறையியல் போன்றவற்றில் நுண்மான் நுளைபுலம் உடையவர்களாக தங்கள் பணியில் தாம் தகுதியுடையவர்களாக விளங்க ஆவன செய்யப்படவேண்டும்.

திரு. ம. யேசுதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் நாடக விழா

யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் நாடகவிழா 02.10.99 அன்று மாலை யாழ் பரி. யோவான் கல்லூரியில் நடைபெற்றது. யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருள்திரு செல்வராஜா அடிகள் பிரதமவிருந்தினராக வருகைதந்திருந்தார். அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த அருள்திரு எஸ்.பி. நேசக்குமார், மெதடிஸ்ற் சபையைச் சேர்ந்த அருள்திரு கருணசேகரா, இரட்சணிய சேனையைச் சேர்ந்த கேணல் கோகுலா, கிறிஸ்தவ ஒன்றியத்தின் உபதலைவர் திரு. டி. ஆர். அருமைநாயகம் ஆகியோரும் சமுகமளித்தனர்.

மங்கல விளக்கேற்றியதைத் தொடர்ந்து ஆரம்ப வழிபாடு இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, நாடகம், மனனவசனம், அருளுரை போட்டிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சிறந்த போட்டியாளர் ஐவர் தங்கப் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக பிரதம விருந்தினர் அருள்தந்தை செல்வராஜா அவர்களின் செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் விழா இனிதே நிறைவுற்றது.

இம்மன்றத்தின் தலைவர் அருள்திரு ஏ.ஏ.போல், செயலாளர் அருள்திரு என்.ஜே. ஞானப்பொன்ராஜா, பொருளாளர் பென் குணரட்ணம் ஆகியோரின் பணியால் விழா சிறப்புற்றது. விழாவில் பல குருமார்களும் பொதுநிலையினரும் கலந்து சிறப்பித்தனர்.

## சகோதரப் பகிர்வின் ஊடாகக் குடும்பவாழ்வை வளம்படுத்துங்கள்

யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட பெண்களுக்கான சகோதரப் பகிர்வு வாழ்வுச் சங்கம் அண்மையில் இளவாலை, பெரியவிளான், மாதகல் பங்குத்தளங்களில் பங்குத்தந்தை அருள்திரு அன்ரனிபாலா அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வுகளின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. முதன்முதலாக இளவாலை புனித யூதாததேயு ஆலயத்திலும் அதனைத் தொடர்ந்து மாதகல் புனித சகாய அன்னை ஆலயம், பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலயம், இளவாலை புனித யாகப்பர் ஆலயம் ஆகிய இடங்களிலும் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

பங்குத்தந்தையவர்கள் இச்சங்கத்தினை ஆரம்பிப்பதனால் ஏற்படும் பயன்கள் பற்றிக் கூறுகையில் "குடும்பப் பெண்களுக்கான இச்சங்கத்தில் இணைந்து சேமிப்புப் பழக்கத்தினை எம்மில் ஏற்படுத்துவதன் வழியாக எமது குடும்பத்திற்கோ அல்லது எமது சமூகத்திற்கோ ஏற்படும் இக்கட்டான வேளைகளில் ஒருவருக்கொருவர் சகோதர மனப்பாங்குடன் அவர்களது வாழ்வின் உயர்ச்சிக்கு உதவும் ஓர் ஊடகமாக இது விளங்குகின்றது. இது ஆதித் திருச்சபையைப் பின்பற்றும் எமது அன்பிய சமூக வாழ்வுக்குச் சிறந்த உதாரணமாகும்" எனக் குறிப்பிட்டார்.

மேலும் சகோதரப் பகிர்வு வாழ்வுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்து சேமிப்பினை ஆரம்பிப்பதனால் ஏற்படும் பல நன்மைகள்பற்றி பங்கு விவசாயக் குழுவின் தாய்ச் சங்கத் தலைவர் திரு. டேவிற் அவர்கள் விளக்கமளித்தார். ஒவ்வொரு பங்கிலும் இச்சங்கத்திற்கான நிர்வாகம் அமைக்கப்பட்டு செயலாற்றத் தொடங்கியுள்ளமை இதன்மீது குடும்பப் பெண்கள் கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றது.

S. M. வுளோரன்ஸ்
(இளவாலை நிருபர்)

## யாழ் புனித சவேரியார் குருமடத்தில் திருப்பணிகள் வழங்கும் திருச்சடங்கு

யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் 14.10.99 அன்று யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களைச் சேர்ந்த அருட்சகோதரர்களுக்கான திருப்பணிகள் வழங்கும் திருச்சடங்கு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

சுயநலத்தின் தாண்டவம் அழிவுகளாக தொடர்கின்ற கொடூரப் போரின் மத்தியிலும் வயிறுகள் ஒட்டி, முகங்கள் கருகி, கம்பி வலைக்குள் எம் மக்களின் வாழ்வு முடக்கப்பட்ட காலத்திலும் எமது அடையாளங்கள் புதைகுழிக்குள் தேடப்படுகின்ற நேரத்திலும், "கடவுள் நம்பிக்கையிலும், என்னை முற்றாக அவருக்குக் கையளிப்பதிலுமே எனது புதிய பாதை தங்கியுள்ளது" என்ற அன்னை திரேசாவின் வார்த்தைகளுக்கு ஒப்ப இவ்வருட்சகோதரர்கள் தம்மை இறைபணியின் வேட்பாளர்களாகவும், வாசகர்களாகவும், பீடத்துணைவர்களாகவும் புலரவிருக்கும் மாபெரும் தசாப்தத்தில் தம்மை நற்செய்தியின் தூதுவர்களாய் அர்ப்பணித்தார்கள்.

ஆயர் தம்முடைய மறையுரையில், மலர்கின்ற 2000ஆம் ஆண்டு தேவநற்கருணைக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டெனவும் எங்களுடைய வாழ்வும் நற்கருணையை மையப்படுத்தியதாக இருக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார். இத்திருச்சடங்கில் குருக்கள் துறவிகள் பொதுநிலையினர் கலந்து சிறப்பித்தனர்.

சகோ. ச. சத்தியராஜ்

## ஆனைக்கோட்டைப் பங்கில் மகாஞானொடுக்கம்

அண்மையில் ஆனைக்கோட்டை, நவாலி, தேவர்கட்டு ஆகிய இடங்களில் மகாஞானொடுக்கம் நடைபெற்றது. வீடு சந்திப்பு, வலயத் திருப்பலிகள், கருத்தரங்குகள், அன்பியவிருந்து ஆகியவை இடம்பெற்றன. குருக்கள், அருட்சகோதரர்கள், மறையாசிரியர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலில் இவை நடைபெற்றன. ஆயர், குருமுதல்வர் ஆகியோரின் வருகையானது அனைவருக்கும் உற்சாகம் தருவதாக அமைந்தது.

# உரிமைகள்... உரிமைகளுக்காக..

—அருட்திரு அ. இ. பேனாட்

பேராயர் எல்லாவகையான வன்செயல்களையும் கண்டித்தார். ஒருபுறம் பாதுகாப்புப் படையினரதும் அவர்களுடன் சேர்ந்த ஆயுதக் குழுக்களினதும் பயங்கரவாதத்தையும் கண்டித்தார். அதேவேள்ளை புரட்சியாளரின் வன்செயல்களையும் கடிந்துகொண்டார். அதுமட்டுமன்றி திருச்சபை வெளிப்படையாக இடதுசாரியினரின் பக்கத்தில் நிலையெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்த சில குருக்களையும் அவர் சாடினார். வெறும் அரசியலில் மாத்திரம் ஈடுபட்டிருந்த எந்தக் குழுவுடனும் தன்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை.

அநீதியான நிலமானிய அமைப்பு முறையைக் கண்டித்து ஏழைகளின் சார்பான தமது சுயவிருப்பை நடைமுறைப்படுத்தினார். அதேவேளை கட்சி அரசியலில் அமிழ்ந்துகொள்ளாது, அரசியலுக்கு ஓர் ஆன்மீக பரிமாணத்தை அளிக்கமுனைந்தார். "அரசியலும் ஏனைய செயற்பாடுகள் போன்று ஆன்மீகப் பரிமாணத்தைக் கொண்ட விடயமே. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கென ஒரு அரசியல் நிலைப்பாட்டை எடுக்குமுன், தனது கிறிஸ்தவத் தன்மையைக் கண்டுகொள்ள வேண்டும்". ஒருபுறம் பேராயர் ரொமேரோவும் அவருடன் ஆயர் ரிவேராவும் காலத்தின் அறிகுறிகளை விளங்கிக்கொண்டவர்களாய் அச்சமோ சுயநலமோ இன்றி இறைவார்த்தையைப் போதித்து அதற்கேற்ப வாழமுயற்சித்தனர். மறுபுறம், சமூக மாற்றங்களை விரும்பாது, மேலிடங்களில் தமது செல்வாக்கை இழக்க விரும்பாது, பழமைவாதிகளாய் இருந்தவர்கள் என இரு பிரிவினரைக் கொண்டதாகத் திருச்சபை பிளவுபட்டது. இப்பிரிவைச் சேர்ந்த நான்கு ஆயர்களும் பாப்பரசரின் பிரதிநிதியும் இந்தப் "பிரச்சனைக்காரப் பேராயரை" பதவிவிலக்க வழிகள் தேடினர். பாப்பரசரின் பிரதிநிதியும் அயல்நாட்டுக் கருதினாலும் பாப்பரசரிடம் செல்லவிருப்பதாகவும், பேராயர் ரொமேரோவை பதவி நீக்குவது பற்றிச் சிபார்சு செய்யப்போவதாகவும் செய்தி அடிபட்டது.

அது அவ்வாறிருக்க பேராயருக்கெதிராகத் தனிப்பட்ட முறையிலும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. "அவனுக்குப் பைத்தியம்", "அவனொரு அரசியல் புரளிக்காரன்", என்று கேலிச் சித்திரங்களும் துண்டுப் பிரசுரங்களும் இன்னும் கேவலமான வதந்திகளும் வெளியிடப்பட்டன. "ஒஸ்கார் ஆர்னல்போ ரொமேரோ" என்ற பெயரை மாற்றி "ஒஸ்கார் மார்க்ஸ் நல்போ ரொமேரோ" என்று ஏளனம் செய்தனர். மொட்டைக் கடிதங்களும், உயிருக்கு அச்சுறுத்தலும் அவருடைய நாளாந்த அனுபவமாயிற்று.

இவற்றைச் செய்தவர்கள் பேராயரின் உள்ளத்தையும் ஆரோக்கியத்தையும் உடைக்கலாமென எதிர்பார்த்தனர். மாறாக, அவரோ பொங்கியெழுந்த உற்சாகத்துடன் உரத்த குரலில் உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

அவர் மீதிருந்த கோபம் அவருடைய நண்பன் சுவாமி "ஒக்ராவியோ ஒறிற்ஸ் லூனா" என்பவர் மீது தீட்டப்பட்டது. 34 வயதான இவர், ஞான ஒடுக்கம் போதித்துக் கொண்டிருக்கும் போது கவச வாகனத்தில் சென்ற படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். பலரின் மதிப்பையும் பெற்றிருந்ததோர் இளங்குரு இவர்.

(தொடரும்)

# இயேசுக் கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர்

## புதிய வாழ்வின் அப்பம்



### முன்னுரை

### 2000 யூபிலி ஆண்டு ஆழ்ந்த நற்கருணை ஆண்டாகும்.

2000ஆண்டு யூபிலி எம்மை மூன்றாவது மிலேனியத்துக்கு இட்டுச்செல்லும் இவ்வேளையில் அது இறைமகனின் மனித அவதாரத்தை புதிய கண்கொண்டு நோக்கத்தூண்டுகின்றது. இதன்மூலம் தனிப்பட்டமுறையிலும் சமூகமாகவும் இதிலிருந்து ஊற்றெடுக்கும் புதுப்பிக்கும் அருளை நாம் துய்த்துணர்ந்து, பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்டு வாழ்வின் ஊற்றாகிய இறைவனை அண்டிச்செல்வோம். காலங்களுக்கு முந்தியவரான கிறிஸ்து இப்போது காலத்தில் வந்து பிறந்துள்ளார். அனைத்தையும் தம்மிடம் உயர்த்திக்கொள்ளவும், படைப்பில் ஒன்றிப்பை ஏற்படுத்தவும், மனுக்குலத்தை இறையரசினுள் அழைத்துச் செல்லவுமே அவர் வந்துள்ளார்.

கிறிஸ்துவினது மீட்பின் மறைபொருள் அவர் கன்னிமரியாளிடம் கருத்தரித்ததில் ஆரம்பமாகி, சிலுவையின் மீது முழுமையாக வெளிப்படுத்தப்பட்டு, வரலாற்றை ஊடுருவி நிற்கின்றது. இயேசுவின் பாஸ்கா நிரந்தர பலனுள்ள ஒரு வரலாற்று உண்மையாகும். நாம் நற்கருணையை நிறைவேற்றும் போதெல்லாம் அவரது மரணம், உயிர்ப்பு ஆகியவற்றிலிருந்து வந்த மீட்பின் பலனைப் பெற்றுக்கொள்கின்றோம். இது இறைவன் எம்மோடு எம்மனைவருக்குமாக இருக்கிறார் என்பதற்குச் சான்று பகர்கின்றது. 20 நூற்றாண்டுகளுக்கு முன்பு மனுவுரு எடுத்த மீட்பர் நற்கருணையிலே இறைவாழ்வின் ஊற்றாகத் தம்மை மனுக்குலத்துக்கு அளித்துவருகிறார்.

(வளரும்)

சி
ந்
தி
க்
க

ஒ
ரு

க
தை

## சிந்திக்க ஒரு கதை

## முதலைக் கண்ணீர்

பருந்து கோழிக்குஞ்சு ஒன்றைத் தூக்கிக்கொண்டு பறந்தது.
பரிதாபமாக அக்குஞ்சு கதறியது. அந்தப் பக்கம் வந்த காகம் ஒன்று அப்பருந்தைப் பார்த்துக் கேட்டது :
"என்ன செய்கிறாய்?"
"கோழி மிதித்து இறந்துவிடாமல் இதைக் காப்பாற்றுகிறேன்"

**தங்களைச் சந்திக்கப் பயப்படும் பலர், மற்றவரது குற்றங்களையும் பலவீனங்களையும் சிந்திக்கின்றனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி : 10 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர் : 9 | எம் வாழ்வின் வழி யேசு |

அன்புக் கண்மணிகளே!

குழந்தை யேசுவின் ஆசிகள் உங்களுள் நிறைவதாக. எம் அன்புத் தலைவர் யேசுவின் உதயவிழா இன்னும் சில நாட்களில் வந்துவிடும். அவ்விழாவுக்கான ஆயத்தம், அதாவது அக ஆயத்தம் எப்படி அமையவேண்டுமென சில வரிகளில் எழுதி அனுப்புங்கள். பரீட்சைக்கு ஆயத்தம்தானே! தெளிந்த மனதுடன், செப சக்தியின் துணையுடன் படியுங்கள்.

அடுத்த மடலில் சந்திக்கிறேன்.

அன்பின்
அன்புவிழி

**சொற்படி 2** – விடைகள்:

1. தீ 2. நான் 3. வளம் 4. இன்பம் 5. மனவலிமை
6. பாடசாலைகள் 7. தமிழர்களின் 8. புரட்சிகரமான
9. அளிக்கப்பட்டது 10. நாட்டுப்பிரச்சனையே

**பரிசு பெறுபவர்:** ஒருவர் மட்டும் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பியுள்ளார். அவருக்குக் காவலன் கண்மணிகளின் பாராட்டுக்கள்.

டெ. க. அரவிந்தராஜ் (அ. எ. 332)

பரிசைக் காவலன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் அன்புவிழியின் நன்றி உரித்தாகுக.

**தேன்துளி : வாழ்க்கை**

வாழ்க்கை! இரு முடிவின்மையிடையே மின்னி மறையும் ஓர் ஒளி. மறுவாய்ப்பு நமக்கு ஒன்றுமில்லை.

**தாமஸ் கார்லைல்**

வாழ்க்கை நமது சாவற்ற வாழ்வின் மழலைப் பருவம். பயனற்ற வாழ்க்கை சிசு மரணத்திற்கு ஒப்பாகும்.

**J. M. கோத்தே**

நன்கு வாழ்பவனுடைய வாழ்வே நீண்ட வாழ்வு. வீணில் கழித்த நேரம் வாழ்ந்த நேரமல்ல, ஆனால் இழந்த நேரம்.

**புல்லர்**

## ஏட்டில் பதிவோம்

### பழமொழிகள்

26. அதிகாரம் இல்லாவிட்டாலும் பரிவாரம் வேண்டும்
27. அதிர அடித்தால் உதிர விளையும்
28. அத்துமீறிப் போனான் பித்துக்குழி ஆனான்
29. அந்திமழை அழுதாலும் விடாது
30. அப்பியாச வித்தைக்கு அழிவில்லை
31. அயலார் உடமைக்குப் பேயாய்ப் பறக்கிறான்
32. அய்யன் அளந்தபடி
33. அரசனுக்கு ஒருசொல், அடிமைக்குத் தலைச்சுமை
34. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்
35. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

## யார் இவர்?

பிரான்சு நாட்டின் புறொவான்சில், புரட்சியின்போது பூத்த மலர்.
ஏக்ஸ் நகரத்துப் பெரிய பிரபுவின் மகன் இவர்.
மருத்துவப் பேராசிரியரின் பேரப்பிள்ளை.
சிறு வயதிலே அதிகாரத்துவத் தன்மை கொண்டவர். ஆனால் அதே வேளை, சேரிச் சிறுவனுக்கு தன் உடை கொடுத்து அவனின் அழுக்குடை பெற்ற அன்புள்ளம் கொண்டவர்.
நண்பனின் குடும்பம் ஏழ்மையில் விறகின்றி குளிரில் நடுங்கிய பொழுது வண்டியில் விறகு கொண்டுசென்று கொடுத்த ஈகையாளன் இவர்.
பிரான்சுப் புரட்சிக்குள் சிக்கி பிறந்த மண்ணை விட்டு அயல்நாடுகளில் பட்டறிவு பெற்றவர்.
அந்நிய இடத்தில் வாழ்ந்தபோதும் கல்வியில் முதலிடம் பெற்றவர்.
வெனிஸ் நகரில் ஸினெல்லி சுவாமியின் அன்புறவால் பகட்டு வாழ்வைத் துறந்து தப வாழ்வை நாடிய இளம் பிரபு இவர்.
சீமாட்டி கனிசறாவின் வழிகாட்டலில் வறுமையின் கொடுமையை உற்று உணர்ந்தவர்.
புரட்சியும் வாழ்வுச் சுழற்சியும் புகட்டிய பட்டறிவால் உள்ளம் உருகி, தெளிந்த மனதுடன் பெரிய வெள்ளியன்று தியாகத் தலைவன் யேசுவிடம் சரணடைந்தவர்.
குருவாகி, வாலிப இயக்க வழியாகி, மனிதநேயப் பணியால் ஆயராகி, இறையரசின் செய்திபரப்பும் ஓர் உயரிய சபையை உலகுக்கு அளித்த உன்னதர்.

யார் இவர்?

**இவர்தான் அமலமரித் தியாகிகள் சபையைத் தந்த அன்பரசர் புனித இயூஜின் டி மசனெட் ஆவார்.**

# புனித மாக்சிமிலியான் கோல்பே

(தொடர் குறுநாவல்)



மாக்சிமிலியான் சுவாமியார் போலந்துக்குத் திரும்பிய ஒருசில மாதங்களுக்குப்பின் அதாவது 1939ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் திடீரென போல்ந்து நாட்டைச் சார்ந்த நகரங்கள், கிராமங்களுக்கு மேலே நூற்றுக் கணக்கான விமானங்கள் குண்டுகள் வீசியதால் எல்லா இடங்களிலும் தீப்பற்றி எரிந்தது.

அச்சமயத்தில் ஹிட்லர் ஜேர்மன் நாட்டை ஆண்டு வந்தார். தன் நாடு மிகப்பெரிய நாடாக விளங்கவேண்டுமென விரும்பிய அவர், மற்ற நாடுகளை அழிக்கத் தீர்மானித்தார். எனவேதான் போலந்து நாட்டின்மீது போர் தொடுக்குமாறு தன் இராணுவத்திற்குத் திடீரென ஆணை பிறப்பித்தார்.



ஜேர்மன் நாட்டு இராணுவம் போலந்து நாட்டுக்குள் முன்னேறிக்கொண்டிருந்தது. மறைத்திரு மாக்சிமிலியானின் கட்டிடங்கள் மீது பலமுறை குண்டுகள் வீசப்பட்டன. அவர் தன்னோடு பணிபுரிந்த 500 சகோதரர்களையும் அழைத்து, உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவரவர் சொந்த வீட்டுக்குப் போகுமாறு கூறினார். ஒரு சிலரை மட்டுமே தன்னோடு வைத்துக்கொண்டார்.

சிரமங்களுக்கு மத்தியில் சமாளித்து இன்னும் ஒரு மாதப் பத்திரிகை அச்சிடப் பெற்று விநியோகம் செய்யப்பட்டன. அந்த வெளியீட்டில் இறைவனின் அன்பைப் பற்றிக் கூறி, யுத்தத்தையும் கொடூரங்களையும் கண்டனம் செய்து சமாதானத்திற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஜேர்மன் காவல் துறையினருக்கு இது தெரியவந்தது. ஒருசில தினங்களில் கறுப்பு நிறக் கார் ஒன்று மறைத்திரு மாக்சிமிலியான் அறைக் கதவுக்கு முன்னால் வந்துநின்றது.

கார் வந்து நின்றதையும் அதிலிருந்து ஐந்து காவலர்கள் இறங்கியதையும் ஒரு சகோதரர் பார்த்ததும், அதனைக் குருவானவரிடம் சொன்னார். "உண்மைதானா?" என்று சிறிது கலக்கத்தோடு வினவிய மறைத்திரு, மாக்சிமிலியான் பயத்தை மேற்கொண்டவராய் "சரி உடனே வருகிறேன். மரியே வாழ்க!" என்று கூறிவிட்டுக் காவலர்களைச் சந்திக்கச் சென்றார். போலந்து நாட்டு வழக்கத்துக்கு ஏற்ப "இயேசுக் கிறிஸ்துவுக்குப் புகழ்" என்றுகூறி, அவர்களை அன்புடன் வாழ்த்தினார்.



காவலர்கள் பதில்கூடச் சொல்லவில்லை. "நீர்தான் மாக்சிமிலியான் கோல்பேயா?" என்று அவர்களில் ஒருவன் பலத்த குரலில் கேட்டான். "ஆம் நான்தான்" என்றார். அவர்கள் அவரைக் காருக்குள் நுழையச் செய்து 'வார்சா'விலுள்ள சிறைக்குக் கொண்டுபோனார்கள். மறுநாள் சிறையின் தலைமைக் காவலன் மறைத்திரு மாக்சிமிலியான் துறவற அங்கியோடு இருப்பதைக் கண்டு சினங்கொண்டான். அவன் ஏற்கனவே தீயவன் கொடூரக்காரன்.

மறைத்திரு மாக்சிமிலியான் இடுப்பில் அணிந்திருந்த செபமாலையைப் பறித்து, பாடுபட்ட சுருபத்தைக் காண்பித்து "மடையா, ராஸ்கல் இதன்மீது நீ நம்பிக்கை வைத்துள்ளாயா?" என்று உரக்கக் கத்தினான்.

(தொடரும்)

## இந்த இடத்தில் சிரிக்கவும்

ஒருநாள் கோயிலுக்கு முன்னாலுள்ள வீதியில் ஒரு கழுதை செத்துக் கிடந்தது. பங்குக் குருவானவர் இதுபற்றி நகரசபைக்குத் தொலைபேசியில் அறிவித்தார்.

செய்தியைப் பெற்றுக்கொண்ட இளைஞன் தனது கெட்டித் தனத்தைக் காட்ட, "சுவாமி இறந்தவர்களை அடக்கம் செய்வது உங்கள் வேலைதானே?" என்று கேலியாகக் கேட்டான்.

"ஆம், ஆனால் முதலில் உறவினர்களுக்கு அறிவிக்க வேண்டுமல்லவா?" என்று பதிலளித்தார் குரு.

## நியமம்

இ. மரிய பேடினற் யஸ்லீன் (அ. எ. 334)

மழை பேய்மழை!
வெள்ளம் கரைபுரண்டோடியது
குடிசைகள் காலிழந்து விழுந்தன
மக்கள் மேட்டுநிலங்களை நாடி ஓடினர்
மரங்கள் மண்ணிழந்த துயரில் தலைவிரி கோலமாய் விழுந்தன
கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டன. அந்தப் பயத்தில் அவைகள்
தத்தம் இனங்களைக் கத்தி அழைத்தன.
உயிர்களின் பயணம் எங்கே?
அழிவு! நாசம்!! மரணம்!!!
மழை ஓய்ந்தது. சூரியன் சுள்ளென எறித்தான்
வெள்ளம் மெல்லமெல்ல வடிந்தது கோலம் படிப்படியாக மாறியது
மீண்டும் தரை தன்னுயிர் பெற்றது
ஓ . . . எதுவும் . . . எவையும்
எம்மை விட்டு நீங்காத ஊனாகி உயிராகி ஆன்மாவாகி
நித்திய சுழற்சியின் வரவும் செலவுமாக பகலும் இரவுமாக
நித்திய நியமம் ஆகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகில் நடப்பவை சில . . .

தொகுப்பு : ஆ. அஜந்

## ஆபிரகாம் பிறந்த "ஊர்"

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் திருப்பயணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படும் ஈராக்கின் "ஊர்" நகரைப் புதுப்பிப்பதற்கு ஈராக் தலைவர் சதாம் உசேன் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று பாக்தாத் தினத்தாள்கள் தெரிவிக்கின்றன. புதுப்பித்தலுக்கென ஒரு குழு உருவாக்கப் பட்டிருப்பதாகவும், இக்குழு புதுப்பித்தலுக்கான செலவு மற்றும் விபரங்களை சமர்பிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பாக்தாத்துக்கு தெற்கே 400 கிலோ மீற்றரில் பாலைவனப் பகுதியில் உள்ள "ஊர்", பழைய ஏற்பாட்டின்படி பிதாப்பிதா ஆபிரகாம் பிறந்த ஊராகும்.

## பிலிப்பைன்ஸ் மறைமாவட்டங்களில் ஜனநாயகத்தை ஆதரிக்கும் செயற்பாடுகள்

பிலிப்பைன்ஸ் மணிலா பேராயர் கருதினால் ஜைமி சின்னும் முன்னாள் ஜனாதிபதி கொரசோன் அக்குவினோவும் விடுத்த அழைப்பையடுத்து அண்மையில் எட்டு ஆயர்களும் அநேக குருக்கள், கன்னியர்களுடன் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மக்களும் மக்காட்டியில் நடைபெற்ற ஜனநாயகத்தை ஆதரிக்கும் பேரணியில் பங்குகொண்டனர். தற்போதைய அரசு ஆராய்ந்துவரும் அரசியல் யாப்பில் மாற்றங்கள், பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகள் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோசின் குடும்பத்தவரோடு உடன்பாடு போன்ற திட்டங்களை எதிர்ப்பதே இப்பேரணியின் நோக்கமாகும். இப்பேரணி நடந்த அதேவேளையில் நாட்டின் 50க்கு மேற்பட்ட மறைமாவட்டங்களில் நற்கருணை வழிபாடுகள், பேரணிகள், பாத யாத்திரைகள், கருத்தரங்குகள் போன்றவை நிகழ்த்தப் பட்டன.

## தமிழில் தொடர்புசாதனக் கல்வி பற்றிய முதல்நூல்

ஜோன் பொஸ்கோ தொடர்பு சாதனக் கலை நிறுவனத்தினால் தொடர்புசாதனக் கல்வி பற்றிய முதல் தமிழ் நூலாகிய "மீடியா உலகம்" யூன் 17ஆம் திகதி வெளியிடப் பட்டது. இதுவே இத்துறையில் தமிழில் வெளிவந்த விரிவான நூலாகும். இதன் ஆசிரியராகிய சுரேஸ் பவுல் கருத்தரங்குகள் நடத்துவதிலும் கட்டுரைகள் எழுதுவதிலும் தமக்குள்ள பத்து வருட அனுபவங்களைக் கொண்டு இந்நூலை எழுதியுள்ளார்.

## இந்தியத் தேர்தலின் பின் கிறிஸ்தவருக்கு இடர்ப்பாடு

இந்தியத் தேர்தலையடுத்து பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தபின், கிறிஸ்தவர்களுக்கெதிராகப் பல வன்முறைகள் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. குஜராத் மாநிலத்தில் அக்டோபர் 9ஆம் திகதி நடைபெற்ற கிறிஸ்தவர்களின் செபக்கூட்டம் ஒன்றினை சமயத் தீவிரவாதிகள் குழப்பி, தலைவர்களைத் தாக்கி அவமதித்ததாகக் கூறப்படுகின்றது.

ராஜஸ்தான் மாநிலத்தில் பிதா வயாலில் என்பவர்மீது இரு இளைஞர் கல்லெறிந்ததாகவும் அவர் பொலிசாரிடம் அறிவிக்கச் சென்றபோது, அவர்கள் இன்னும் 50 பேரைத் திரட்டிக் கொண்டு அவரைத் தொடர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றொரு நிகழ்ச்சியில், பிதா போல்ராஜ் என்பவர் தமது விடுதிச்சாலைப் பிள்ளைகளை நகருக்குக் கூட்டிச் சென்றபோது அவர்கள் பலவந்தமாகத் தடுக்கப்பட்டு அச்சுறுத் தப்பட்டதுடன், பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்று விசாரிக்கப்பட்டிருக்கின்றனர்.


இந்நிகழ்ச்சிகளைப் பற்றி டெல்லி பேராயர் அலன் டி லாஸ்டிக் பிரதமருக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளையில், கோவாவில் இந்துக்கள் துன்புறுத் தப்பட்டமை, மனந்திருப்பப்பட்டமைக்காக இந்துக்களிடம் திருத் தந்தை மன்னிப்புக்கோர வேண்டும் என்று "விஸ்வ இந்து பரிஷாத்" என்ற அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

## கிறிஸ்தவ செய்திப் பத்திரிகை

வட இந்தியாவின் பல்வேறு மறைமாவட்டங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ எழுத்தாளர்கள் வரணாசி ஆயர் பற்றிக் டிசூசாவின் இல்லத்தில் ஒன்றுகூடி இந்துத் தீவிரவாதிகளால் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை எதிர்க்க வழிவகைகளை ஆராய்ந்தனர். தமது ஆற்றல்களுக்கேற்ற வகையில் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் கட்டுரைகள் எழுதவும், ஹிந்தியில் ஒரு செய்திப் பத்திரிகை வெளியிட்டு இந்தியாவில் கிறிஸ்தவத்தின் நிலைபற்றி மக்களுக்கு எடுத்துரைக்கவும் தீர்மானித்தனர்.

# அர்ச்சனைப் பூக்கள்



## திருவழிபாட்டில் திருஇசையும் அது படும் பாடும்

### ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம்

–அருள்திரு பா. பி. இராஜசிங்கம்

04

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் திருஇசை

### வரலாறு சொல்லும் கதை

ஆரம்ப காலத்தில் திருச்சபையின் வழிபாடுகளில் யூத மரபுப்படி மிக இலகுவான இசையே பயன்படுத்தப்பட்டது. இதனால் அன்றைய பாடல்கள் ஆழ்ந்த விசுவாசப் போதனையைக் கொண்டிருந்தன. எல்லா மக்களாலும் பாடப்பட்டன. காலப்போக்கில் திருத்தந்தை பெரிய கிறகோரியார் (590–604) வழிபாட்டில் திருஇசைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதைத் தனது கண்காணிப்பின் கீழ் நெறிப்படுத்தி அங்கீகரித்தார். இதனால் அன்றிலிருந்து இன்றுவரை அவரது அங்கீகாரம்பெற்ற திருஇசை "கிறகோரியார் இசை" என்று அழைக்கப்பட்டு வருகின்றது. திருச்சபையின் எல்லா வழிபாடுகளிலும் கிறகோரியார் இசைக்கே முதலிடம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் காலப்போக்கில் அவ்விசைக்கு பல நெருக்கடிகளும் எழுந்தன.

பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் கிறகோரியார் இசைக்குப் பதிலாக வேறு இசைகளும் வழிபாட்டில் புகுந்தன. அதேவேளை இலத்தீன் மொழிப் பாவனையும் குறைந்துபோக, மக்களனைவரும் சேர்ந்து பாடிவந்த நிலை மாறியது. அதுமட்டுமல்லாமல் எளிதாக இருந்த இசையும் மென்மேலும் கடினமானது. இசை கடினமாகக் கடினமாக பின்னணியாகப் பல இசைக்கருவிகளும் திருஇசையில் புகுத்தப் பட்டன. இதனால் தேர்ச்சிபெற்ற இசைக் கலைஞர்களே பாடகர் குழுவில் செயற்படலாம் என்ற நிலை ஏற்பட்டது. தேர்ச்சிபெற்ற இசைக் கலைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தமையினால் கத்தோலிக்கர் அல்லாதோரும் பாடகர் குழுவில் அங்கம் வகித்தனர். இதனால் இவர்களுக்கு திருவழிபாடு பற்றிய இறையியல் அறிவு குறைவாகவே காணப்பட்டதனால் சொற்சிதைவுகள் ஏற்பட்டன. இசைக்குத் தக்கவாறு சொற்கள் மாற்றியமைக்கப்பட்டதனால் அதன் இறையியல் கருத்துக்களும் மாறின. அதுமட்டுமல்லாமல் முன்னிசை, இடையிசை, என இசைக்கருவிகளும் அதிகரித்தன. இதனால் பாடல்களும் நீண்டதாகக் காணப்பட்டது. இதனால் குரு செபங்களை மௌனமாகவே சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இறைமக்கள் "ஆமென்" போன்ற சிறிய பதிலுரைகளில் மட்டும் பங்குபற்றினர். மேலும் திருவழிபாடு ஒரு இசைநாடகமாக மாறும் நிலைக்குத் தள்ளப்பட்டதுமல்லாமல் பாடகர் குழுக்களுக்குள்ளே போட்டியும் நிலவியது.

இந்நிலை 18ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. திருவழிபாட்டிற்கும் திரு இசைக்கும் எதுவித தொடர்புகளும் இல்லாத இழிநிலையும் ஏற்பட்டது. ஆயினும் இந்நிலை தொடராது திருவழிபாட்டினதும் திருஇசையினதும் புனிதத் தன்மையும் தொடர்பும் பாதுகாக்கப்பட வேண்டுமென குரல் எழுப்பப்பட்டது. இதன் பின்னணியாக 19ஆம் நூற்றாண்டில் "செசிலியம்மாள் இயக்கம்" ஒன்று தோன்றியது. இதனால் மீண்டும் கிறகோரியார் இசை புத்துணர்ச்சியோடு திருவழிபாடுகளில் பாடப்பட்டு வந்தது. மீண்டும் வழிபாடுகள் மக்கள் வாழ்வில் அர்த்தமுள்ளவையாக மாறின. (வளரும்)

# யாழ்ப்பாண மறைசாட்சிகள்

04

### கத்தோலிக்கரின் நிலை

இவ்வாறான தடைச் சட்டங்களும் அவற்றைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட கடும் நடவடிக்கைகளும் கத்தோலிக்க மதத்தை யாழ்ப் பாணத்திலிருந்து இல்லா தொழிக்குமென ஒல்லாந்தர் கருதினர். ஆனால் பல கத் தோலிக்கர் கடும் தண்டனைகளுக்கு அஞ்சாமலும் சலுகைகளைக் கண்டு ஏமாறாமலும் இருந்தனர். தமது மத நம்பிக்கையை உறுதியுடன் காத்தனர். தனியார் இல்லங்களில், இரவுவேளைகளில் இரகசியமாக ஒன்றுகூடி செபித்துவந்தனர். தத்தம் பழைய ஆலயங்களிலிருந்து ஒல்லாந்தருடைய கண்களில் படாது திருச்சுரூபங்களை இரகசியமாக எடுத்துவந்த கத்தோலிக்கர், அவற்றைத் தாம் வழிபாட்டுக்கெனக்கூடும் தனியார் இல்லங்களிலும் மறைவிடங்களில் அமைந்திருந்த வழிபாட்டிடங்களிலும் மறைத்துவைத்தனர்.

தமது மத நம்பிக்கைக்கு ஏற்பட்ட கடினமான சோதனைகளால் மதம் மாறி கல்வினிஸத்தைத் தழுவிய கத்தோலிக்கரும் கணிசமானோர் இருந்தனர். இது கத்தோலிக்க சமயத்திற்கு ஒரு பின்னடைவு என்றுதான் கொள்ளவேண்டும். குருக்களின்றிய நிலைமை நீண்ட காலம் நீடித்திருந்தால் கத்தோலிக்க மதம் படிப்படியாக வலுவிழந்து போயிருக்கக் கூடிய ஆபத்தும் இருந்தது. ஆனால் இறைவனின் திட்டம் இந்த ஆபத்தைத் தவிர்த்தது. ஆயனின்றி இன்னலுற்ற இலங்கைக் கத்தோலிக்கரைக் காக்கவென ஒருவரை அண்டை நாடாகிய இந்தியாவிலுள்ள கோவா மாநிலத்திலிருந்து இப்பணிக்கென இறைவன் தேர்ந்து கொண்டார்.

(தொடரும்)

# மனித அவதாரத்தின் மறைபொருள் 01

**திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரால் 1998 நவம்பர் 29இல் திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறன்று வெளியிடப்பட்ட 2000ஆம் ஆண்டு மாபெரும் யூபிலியை அறிவிக்கும் ஆணை.**

இறைமகனது மனித அவதாரத்தின் சிந்தனையுடனே வானிலும் மண்ணிலுமுள்ள அனைத்தையும் தம்மில் இணைத்துக்கொள்ளும் பொருட்டே இறைவன் தமது திருமகனை அனுப்பினார் என்பதை நினைவிற் கொண்டே திருச்சபையானது மூன்றாவது மிலேனியத்துள் பிரவேசிக்க ஆயத்தம் செய்கிறது.(எபே. 1:3-10)

இயேசு கிறிஸ்துவிலேயே மீட்பு வரலாற்றின் உச்சநிலையும் இறுதிப்பொருளும் காணப்படுகின்றன. தந்தையுடன் ஒப்புரவாகிய நாம் அருளை நிறைவாகப் பெற்றுள்ளோம். (யோவான் 1:16) (ரோமர் 5:10, 2 கொரி. 5:18)

இயேசுவின் பிறப்பு கடந்த காலத்துக்குரிய ஒரு நிகழ்ச்சி என ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் அவர் "வாழ்பவர்" (திருவெளி. 1:18) "இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவருமாவார்" (திருவெளி. 1:4)

### மூன்றாவது மிலேனியத்தின் வருகை

2000ஆம் ஆண்டு மாபெரும் யூபிலியானது உரோமாபுரியிலும் பரிசுத்த பூமியாகிய பாலஸ்தீனாவிலும் உலகெங்கிலுமுள்ள தலத் திருச்சபைகளிலும் ஒரேவேளையில் கொண்டாடப்படும். யூதர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் ஆகிய நாம் அனைவரும் ஜெருசலேம் நகரில் சமாதான வணக்கம் பரிமாறும் நாள் வரும் வரை இந்த யூபிலியானது பரஸ்பர உரையாடலில் முன்னேற்றம் காணத் துணை புரிவதாக.

(வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணர்வுச் சித்திரம் 9

## குரு பக்தி

~வரனம்பாடி

அற்புதன் அதிபர் அறைமுன் நின்றான்
அவன் அகத்தில் எண்ண அலைகள்
எழுந்து விழுந்தன
15 வருடங்களின் முன் கற்ற கல்லூரிக்கு,
தன்னை ஒரு மனிதனாக உருவாக்கிய கல்லூரிக்கு
எவ்வகையில் தன் பங்களிப்பைச் செய்யலாம்
என்று நினைத்தவேளை உதித்த எண்ணம்
அவனை இவ்விடம் கொண்டுவந்து நிறுத்தியது
தற்காலிக ஆசிரிய வெற்றிடம் இருப்பதை
அறிந்து விண்ணப்பித்தான்.
கனடாவில் 10 ஆண்டுகள் இருந்தவன், தாயகம்
திரும்பியபின் அவனுள் எழுந்த எண்ணம்தான் இது
அதிபர் அற்புதனை அழைத்தார்
அற்புதன் உள்ளே சென்றான்
அதிபர் அற்புதனை மலர்ந்த முகத்துடன்
ஏற இறங்கப் பார்த்தார்
ஆசனத்தில் அமரும்படி அன்புடன் கூறினார்
அற்புதன் தனக்குரிய மிடுக்குடன்,
அதேவேளை பணிவுடன் ஆசனத்தில் அமர்ந்தான்
"இந்தப் பிள்ளைகள் வெளிநாடு சென்றவுடன்
எப்படியெல்லாம் மெருகூட்டப்படுகிறார்கள்"
என்று அதிபர் தன்னுள் எண்ணினார்
அற்புதன் தன் ஆங்கில ஆசிரியர், அதிபராக
இருப்பதில் மகிழ்ச்சியடைந்தான்
அவரிடம் கற்ற ஆங்கிலம்
வெளிநாட்டில் அவனுக்குக் கைகொடுத்தது
ஆங்கிலம் கற்கையில்
அவர் ஊட்டிய வாசிப்புப் பயிற்சி
அவனது ஆங்கில அறிவுக்கு வளம் சேர்த்தது
அவரிடம் அந்நாளில் வாங்கிய அடிகள்
அவனுள் உறைத்து மறைந்தன
"அற்புதன் கணிதம், ஆங்கிலம் கற்பிக்க
ஆசிரியர் தற்பொழுது இருக்கின்றனர்"
என்று கூறியதும், அற்புதன் அவரை
அன்புடன் உற்று நோக்கினான்
"முக்கியமாக உமது உதவி
விளையாட்டுத்துறைக்குத் தேவை"
என்றார் அதிபர்
அற்புதன் முகமலர்வுடன் "சேர் நானும்
அந்த எண்ணத்துடன்தான் இந்த விண்ணப்பத்தை
அனுப்பினேன்" என்றான்
கனடாவிலிருந்து வந்து சிலநாட்கள்
கொழும்பில் தங்கியிருந்தபோது,
தேசிய பாடசாலைகள் தட - களப் போட்டியைப்
பார்த்தான் அப்போட்டியின் தரம் கண்டு
மலைத்துப் போனான் அதேவேளை
வடபகுதி மாணவரின் தரம் தேசிய மட்டத்திற்கு
இல்லாதது கண்டு கவலை அடைந்தான்
வடபகுதி மாணவரைச் சந்தித்து
அவர்களின் குறைநிறைகளை அறிந்து கொண்டான்
தென்பகுதி மாணவரிடம் ஓங்கிநின்ற குருபக்தி
தம் மாணவரிடம் அருகி இருப்பதை அவனால்
உணர முடிந்தது. குருபக்தி சிறிது சிறிதாக
நம்மிலேயே குறைந்துவருவது
எதிர்காலத்தில் பல எதிர்மாறான விளைவுகளை
சமூகத்தில் உண்டாக்கும் என்பதனை
அவன் அறியாதவன் அல்லன்
"அற்புதன் என்ன கடுமையாக யோசிக்கிறீர்!
கவலையை விடும் நீர் எந்த வகையில்,
எத்துறைக்கு உமது உதவியைச்
செய்ய நினைக்கின்றீர்?" என்று கேட்டார்
"சேர் நான் தட - களப் பயிற்சி அளிக்க
ஆர்வமாக உள்ளேன்"
"வெரிகுட் நானும் அதைத்தான் உம்மிடம்
எதிர்பார்த்தேன், நீர் எம்மிடம் எதை எதிர்பார்க்கிறீர்?"
"விளையாட்டுத்துறை சார்ந்த ஆசிரியரின்
அன்புக் கரமும், உங்கள் பக்கபலமும்
இருந்தால் போதும் வேறொன்றும் தேவையில்லை"
என்றான். அவன் இதனைக் கூறுகையில்,
"இறை தந்த ஆற்றல்களை மற்றவர் உயர
இறை மகிமைக்காக கொடுக்கவேண்டும்,
அப்பொழுது உமது ஆற்றல்களும் மெருகேறும்"
என்று அன்று குருநாதர் கூறிய வார்த்தை
அவன் இதயத்தில் துடித்தது.
அவனைச் செயலாக்கத் தூண்டியது.
அவன் ஆசனத்திலிருந்து எழுந்தான்.
"சேர், மாலை 4.30க்கு வருகிறேன். நன்றி" என்றான்
"உம் வருகையை எதிர்பார்த்து நிற்கிறேன்"
என்றார் அதிபர்.
அற்புதன் மனநிறைவோடு வீடு திரும்பினான்.

*நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து யேசு வழியாகப் படைக்கப்பட்டிருக்கிறோம்.*
(எபே : 2 : 16)

## உரும்பிராய்ப் பங்கில் புனித மிக்கேல் பெருவிழா

வெகுசிறப்பாக நடந்தேறிய இப்பெரு விழா இறை-மனித உறவுகளைச் சீர்செய்யும் பாலமாக அமைந்தது. ஆன்ம வாழ்விற்கான தேடல்களில் ஈடுபட வாய்ப்பளித்து தந்தையின் விசேட அன்பையும் இரக்கத்தையும் பெற்றுக் கொள்ளும் இந்த ஆண்டிலே எழுந்து தந்தையிடம் செல்ல நவநாட் திருப்பலிகள், மறையுரைகள் களம் அமைத்துக் கொடுத்தன. அருள் தந்தை மைக்கல் சவுந்தரநாயகம், பங்குத் தந்தை அருள்நேசன், அருள்தந்தை டன்ஸ்ரன் ஆகியோர் நவநாட் திருப்பலிகளின்போது ஆற்றிய மறையுரைகள் உடைந்துபோன மனங்களை சீர்செய்து புதுமெருகூட்டுவதாய் அமைந்தன.

நற்கருணை விழா அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் இடம்பெற்றது.

திருநாள் திருப்பலியை ஆயர் அவர்களின் தலைமையில் பல அருட்தந்தையர்கள் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். நிறைவில் திருச் சுரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெற்று திருவிழா இனிதே நிறைவுற்றது.

J. றொசான் (உரும்பிராய் நிருபர்)

## கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக் கிளையின் ஒன்றுகூடல்

யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக் கிளையின் ஆசிரியர் தின ஒன்றுகூடலிலும் ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் சிறப்பு விருந்தினர்களாக அருள்திரு ஆர். எக்ஸ். நேசராஜா, அருள்திரு விக்ரர் பிலேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆசிரியர் சங்கப் பரிபாலகர் நேசராஜா அடிகளார் தமதுரையில் "மறைபரப்பு நாளிலே அப்பணியை மேற்கொள்ளும் ஆசிரியர்களாகிய நீங்கள், ஆசிரியர் தின ஒன்றுகூடலையும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தையும் கூட்டியுள்ளமை காலத்தின் தேவை நோக்கிக் கடமையுணர்வுடன் செயற்படும் உங்கள் நேர்மைத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது" என்று கூறினார்.

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்து இயல் பேராசான் அருள்திரு விக்ரர் பிலேந்திரன் அடிகளார் தமதுரையில், "பணிகளிலே பாரிய பொறுப்புள்ள பணி ஆசிரியப் பணி. வைத்தியன் தவறினால் ஓர் உயிருடன் நின்றுவிடும். ஆசிரியன் தவறினால் ஒரு சமுதாயமே சர்வநாசமாகிவிடும்" என்று குறிப்பிட்டார்.

பருத்தித்துறை புனித தோமையார் மகளிர் வித்தியாலயத்தில் 24.10.99அன்று காலை ஆரம்பமான கிளையின் கூட்டத்திற்கு திரு. இ. ம. ஜெயசீலன் தலைமை தாங்கினார்.

## பணிவாழ்வில் நிறைவுகாணும் அருட்சகோதரி யூவேமியா

சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபராக 14 ஆண்டுகள் சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற அருட்சகோதரி யூவேமியா அவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் 12.10.99இல் சேவைநலம் பாராட்டு விழா எடுத்தது.

பாஷையூர் பங்கின் புதல்வியான இவர் யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தின் பழைய மாணவியாவார். துறவற வாழ்வின் மூலம் இறைவனுக்குப் பணிசெய்ய விழைந்த இவர் திருக்குடும்பக் கன்னியர் சபையில் இணைந்து, தனது அர்ப்பண வாழ்வில் அழைப்பினுக்கேற்ற உழைப்பினை நல்கி 38 ஆண்டுகள் பல்வேறுபட்ட பணித்தளங்களில் ஆசிரியசேவை புரிந்துள்ளார்.

ஆசிரிய உலகில் சிறந்த நிர்வாகியாக, கண்டிப்பான ஆசிரியராக, அன்புச்சேவையில் சிறந்த வழிகாட்டியாக, ஆன்மீக வாஞ்சையில் இயேசுவின் பணியாளராகத் திகழ்ந்தவர் அருட்செல்வி யூவேமியா. இடம்பெயர்வு வேளையிலும் மக்களோடு மக்களாக வாழ்ந்து தமது மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றமையை அவர்கள் என்றும் நன்றியுடன் நினைவுகூர்வர்.

அருட்சகோதரி அவர்கள் தமது கல்விப்பணியில் இருந்து ஓய்வுபெற்றாலும் அவரது சமய, சமூகப் பணிகள் சிறப்பாகத் தொடர வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | அமலன் அடியில் |
|---|---|
| 08 | 30 |
| 04 | 09 |
| 1968 | 1998 |

### செல்வி. மேர்லின் மைதிலி தார்சீசியஸ்

(பழையமாணவி, திருக்குடும்பக் கன்னியர் ஆங்கிலப்பாடசாலை, ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம் O.L.R. யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)

பன்னிரு மாதங்கள் ஓடி மறைந்தாலும்
உன்திரு உருவம் மறைந்திடவில்லை
திங்கள் முகவதனம் எந்நாளும் என்றும்
எங்கள் நினைவினில் நிலைத்து வாழும்

உன் ஆன்ம சாந்திக்காக அன்புடன் செபிக்கும், அப்பா, அம்மா, அண்ணன்மார், அண்ணி, தம்பி, தங்கை, மற்றும் உறவினர்.

ஆன்ம சாந்தித் திருப்பலிகள்
29.09.99 பகல் 12.00 மணிக்கு சம்மனசுகளின் இராக்கினி ஆலயம், ராவத்தவத்தை, மொறட்டுவா.
30.09.99 காலை 6.30 மணி. புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.
காலை 6.45 மணி. புனித அந்தோனியார் ஆலயம், கல்கிசை, ஒப்புக்கொடுக்கப்பட்டது.

116/15, கௌடானா வீதி, தெகிவளை.
39, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## 11ஆம் ஆண்டு நிறைவு நாள்



| ஆண்டவன் அளிப்பு | ஆள்பவன் அழிப்பு |
|---|---|
| 28 | 26 |
| 12 | 11 |
| 1970 | 1988 |

### செல்வன். யூட் சக்காறி சந்திரகுமார்

எல்லாம் வல்ல இறைவா!
அன்புக்கு அணிகலனாய் ஆற்றலுக்கு ஆர்வலனாய்
இறைபணிக்கு இனியவனாய் ஈகையிலே சிறந்தவனாய்
உண்மைக்கு உத்தமனாய் ஊக்கத்தில் உயர்ந்தவனாய்
எல்லோர்க்கும் எளியனாய் ஏழைக்கு இரங்குபவனாய்
ஐயமின்றி வாழ்பவனாய் ஒற்றுமைக்கு ஒளிவிளக்காய்
ஓயாத புன்னகைக்கு மன்னவனாய் ஔவியம் அறியானாய்
பெற்றவர்க்கும் உற்றவர்க்கும் கற்றவர்க்கும் மற்றவர்க்கும்
உறவுக்கரம் நீட்டி உதவிக்கரம் காட்டி
பாசத்தில் மிகுந்தவனாய் நேசத்தில் நிறைந்தவனாய்
நட்புக்கு இலக்கணனாய் நண்பர்களுக்கு நண்பனாய்
அன்பர்களுக்கு அன்பனாய் வாழ்ந்து வளர்ந்து
சிறந்து நிறைந்த எம் செல்வன்
யூட் சக்காறி சந்திரகுமாரை
யாழ் பேராலயத்தில் இசைமீட்டச் சென்றவேளை
உமது விண்ணக இசைக்குழுவில் சேர்த்தீரே.
உமது சித்தத்தை நன்றியோடு ஏற்கும் இவ்வேளை
அவருக்கு உமது நித்திய இளைப்பாற்றியை
அளித்தருள வேண்டுகிறோம்.

இவரது நினைவாக யாழ் பேராலயத்தில் 26.11.99 காலை 6.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

19/3, பீச் லேன், ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
தாய், பெரிய தாய் சகோதரர், சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை தந்தையின் ஆண்டு~1999

4

அருள்திரு S. R. கொன்சன்ரைன் C.M.F.

## அப்பா – தந்தாய்

### மனிதத்தின் உயிராய்த் ததும்புபவர்

இயற்கையின் இயக்கத்தை விட அதிகமாக மனிதவாழ்வு நிகழ்வுகளில் இறைவன் உடனிருக்கிறார், செயல்படுகிறார் என்பது இயேசுவின் அனுபவம். அவருடைய பார்வையில் கடவுள் மண்ணின் மலர்களின் இறைவன் மட்டுமல்ல அவர் மனிதர்களின் இறைவன் அவர்களுடன் அன்பால் உடனிருக்கும் தந்தை. மனித உயிரின் ஊற்றும் நிறைவும் அவரே. மனிதவாழ்வின் இறுதியான ஆழமும், அறுதியான அர்த்தமும் அவரே. ஆபிரகாம், மோசே, தாவீது, எசாயா போன்ற சிறந்த மனிதர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதருக்கும் அவர் நெருக்கமானவர். ஒவ்வொரு மனிதருடைய வாழ்விலும் அவர் வழிநடப்பவர், வழிநடத்துபவர், தூய பவுல் ஏதேன்சு மக்களிடம் கூறுவதுபோல் "அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார். அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம்".(தி.ப.17:27-28)

இயேசுவின் அனுபவத்தில் மனிதவாழ்வின் உறவுகள், பிரிவுகள், மகிழ்வுகள், சோகங்கள், அழகுகள், அவலங்கள், வெற்றிகள், தோல்விகள் அனைத்திலும் கடவுளின் அருள்மிகு உடனிருப்பும் ஆற்றல்மிகு செயல்பாடும் உண்டு.

1. குழந்தைகளின் கள்ளம் இல்லா வெள்ளைச் சிரிப்பு (மத். 18:2-35)
2. குற்றம் இழைத்தவர்க்குப் பிறர் அளிக்கும் மன்னிப்பு (மத். 18:21-35)
3. குடியானவர்களின் உழைப்பு (மத். 13:24-30)
4. தவறிய ஆட்டைத் தேடும் ஆயரின் தவிப்பு(லூக். 15:3-7)
5. ஊதாரி மகனை மன்னித்து வரவேற்கும் தந்தையின் தாராள் அன்பு(லூக். 15:11-32)
6. வீதி ஓரங்களில் கிடக்கும் ஊனமுற்றோர் ஏழைகள் தமது விருந்தில் பங்குகொள்ளச் செல்வர். அவர்களுக்கு விடுக்கும் அழைப்பு(லூக். 14:15-24)
7. இறுதியில் வேலைக்கு வந்தோரின் உழைப்பை அல்ல. தேவையைக் கருதி அவர்களுக்கும் சம ஊதியம் தரும் தலைவனின் புதிய நீதிநெறி (மத். 20:11-16) என்பன இயேசுவின் பார்வையில் வெறும் மனிதச் செயல்பாடுகள் அல்ல. அவை இறைவனுடைய தந்தைப் பண்புகளின் சிறப்பான வெளிப்பாடுகள்.

ஒவ்வொரு மனிதரும் இறைவனின் உண்மையான உருவும் உயிருள்ள சாயலுமே. எனினும் ஏழைகளே அதில் முதலும் முக்கியமும் ஆனவர்கள் என்பது இயேசுவின் அனுபவம். ஆம், ஊனப்படுத்தப்பட்ட மனிதத்திலே, உரிமை பாதிக்கப்பட்ட வாழ்வுகளிலே தந்தைக் கடவுளின் குரல் உரக்க ஒலிப்பதை அவர் கேட்டார். பசியிலும், நோயிலும், துன்பத்திலும் துடிக்கும் மனிதத்திலே அவர் இறைவனின் துடிப்பை உணர்ந்தார். அவர்களின் ஏக்கப் பெருமூச்சுக்களிலும் அநீதிகள், ஆதிக்கங்களுக்கு எதிரான எழுச்சியிலும் அவர் தந்தை இறைவனின் அன்புத் ததும்பல்களையே அனுபவித்தார்.(லூக். 6:20),(மத். 25:31-46)

(தொடரும்)

---

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
1987
05
07

உதிர்வு
1996
11
08

### ஜெ. றோய் மில்ரன்

*தங்கமுக மலரவனே அன்பிற் பூத்த*
*தவமகனே என்னுயிரே நெஞ்ச மெல்லாம்*
*பொங்கிவரும் பேரின்பம் பொழிந்த செல்வா*
*புன்னகையும் மதலைமொழிப் புதையல் யாவும்*
*மங்கியுளம் துடிதுடிக்க மறைந்தாய் ஏனோ?*
*மாபரனார் பொன்னடியில் மகிழ்ச்சி காண்பாய்*
*எங்கள் துயர் தவிர்த்திடவே ஏங்கு கின்றோம்*
*இறையருளை இரந்தெம்மை என்றும் காப்பாய்*

இவரது ஆன்ம சாந்திக்காக யாழ் அருள் ஆச்சிரமத்தில் 08.11.99 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

03, புகையிரத நிலைய வீதி,
உசன், மிருசுவில்

பெரிய மாமா, மாமி
பிள்ளைகள்,

---

## அஞ்சலிக்கின்றோம்





**திருமதி**
**நேசமணி பெஞ்சமின்**

பிறப்பு 09.09.1926 இறப்பு 14.03.1997

**செல்வி**
**எலிசபெத் பெஞ்சமின்**

பிறப்பு 10.11.1947 இறப்பு 28.07.1953

கருணையின் தேவனே! இவர்கள்மேல் இரக்கம் கொண்டு இவர்களுடைய பாவங்களை மன்னித்து நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும், ஆமென்.

ஆன்ம சாந்தித் திருப்பலி 16.11.99 செவ்வாய் காலை 6.30 மணிக்கு (பு. நே.) யாழ் பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

அந்தோனியார் கோயில் வளவு,
நீர்வேலி தெற்கு.

பிரிவால் துயருறும்,
அ. இ. பெஞ்சமின்.
மற்றும் உறவினர்கள்.

---

### திருத்தந்தையின் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"போப்பாண்டவர் இந்தியாவுக்கு வருவது இது ஒன்றும் முதல் முறையல்ல. போப் இரண்டாம் ஜோன் போல் முன்பும் இந்தியாவிற்கு வந்திருக்கிறார். அவருக்கு முந்தைய போப்பாண்டவரும் பயணம் செய்திருக்கிறார்". . "பல நூற்றாண்டுகளாக பல்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்ட மக்கள் இணக்கத்துடன் வாழ்வதற்கு உதாரணமாக விளங்குகின்றது இந்தியா. இந்துமதம் இன்று துடிப்புடன் இருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் மற்ற சமயங்களையும் அரவணைத்துச் சென்றுதுதான்". . .

"இதில் அரசியல் நோக்கம் இருக்கிறதே தவிர சமய நோக்கம் எதுவுமில்லை". . "இந்தியா மதச்சார்பற்ற, சகிப்புத்தன்மைமிக்க நாடு என்ற பெருமைக்கு இழுக்குச் சேர்க்கும் வகையிலான வசைமொழிகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று குரல் எழுப்பவேண்டிய தருணம் இது". . . என இந்துஸ்தான் ரைம்ஸ்(20.10.99) தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

**பாதுகாவலன் கிறிஸ்து பிறப்புவிழாச் சிறப்பிதழுக்கான உங்கள் ஆக்கங்களை விரைந்து அனுப்புங்கள்**

### மூன்றாவது . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்புப் பணிக்கு அர்ப்பணிக்க போதிய பயிற்சி பெறுவது இன்றியமையாத ஒன்றாகவுள்ளது. முழுநேரப் பணியாக மறையறிவிப்பில் ஈடுபடமுடியாத நிலையிலும் தங்கள் தகுதிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப, குறிப்பாக வாழும் சூழலிலே நற்சான்று வாழ்வால் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழமுடியும் என்ற நம்பிக்கை இருப்பது அவசியம். எனவே பொதுநிலையினர் தினத்தை நினைவு கூரும் வேளையிலே நற்செய்தியறிவின் அவசி[illegible]

---

## ஏழாம் ஆண்டு நினைவு



பிறப்பு
03
11
1934

இறப்பு
18
10
1992

### செபமாலை செபஸ்தியன்

கலங்காத விழியில்லை பிரியாத உறவில்லை
எம் எல்லோர்க்கும் நீ தஞ்சமே
ஆண்டுகள் ஏழு மறைந்தாலும்
ஒளிர்கின்ற சுடராய் எம் இதயங்களில் வாழ்கின்றாய்
மண்ணக வாழ்வு மறைந்திட்டபோதும்
விண்ணக வாழ்வில் அமைதி கண்டிட வேண்டி நிற்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளை, நண்பர்கள்,

---

## 7ஆம் ஆண்டில் எமது அஞ்சலி



தோற்றம்
04
12
1914

மறைவு
15
11
1992

### பண்டிதர் திரு. மு. க. க. அருட்பிரகாசம்

(அதிபர்)

உயிர்ப்பும் உயிரும் நானே!
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்.
(யோவான் 11 : 25)

கந்தையா மாஸ்டர் என நாமம் தரித்து
வாழ்ந்திட்ட காலம், அது ஒரு பொற்காலம்
ஆனால் இன்று ஆண்டுகள் ஏழுகூட
ஒருநாளாய்த் தெரிகிறதே ஐயா,
தினம் விழித்து எழுந்தவுடன்
செபிக்கின்றோம் உமக்காக
இறைவனில் என்றும் நீர்
நிலையாய் நிலைத்திடவே.

"எமிலகம்"
வளன்புரம்,
கொழும்புத்துறை.

அன்புடன் நினைவுகூரும்,
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

---

## நெஞ்சத்தின் நீங்காத நினைவின்

20ஆம் ஆண்டு



**P. ஜேம்ஸ்**
**இராசசிங்கம்**
(கொழும்புத்துறை R. C. பாடசாலை அதிபர்)

மண்ணில் 25.07.1922 விண்ணில் 23.11.1979

13ஆம் ஆண்டு



**செல்வன். ஜேம்ஸ்**
**உதயபிரசாத்**
(சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்)

உதயம் 18.05.1970 அஸ்தமனம் 08.09.1986

நிழலாக நீர் இருவர் இருந்தீர்கள்
நிம்மதியாய் நாம் வாழ்ந்தோம்
நிழல் இரண்டும் மறைந்ததப்பா
நிம்மதியை நாம் இழந்தோம்
நீங்காத துயர் தந்து
நீவிர் நீண்டதுயில் கொண்டீர்கள்
நாமிருவர் உம் நினைவால் நாளும் துடிக்கின்றோம்
நீவிர் வானவர் மத்தியில் வல்லபரன் தரிசனம் கண்டிடுவீர்
இறைவனடி சேர்ந்து இன்புற்று வாழுமப்பா
இங்கு கண்ணீரில் மிதக்கும் எமக்கு இறை ஆசி தாராயோ
மறு உலகில் நாம் மீண்டும் சந்திப்போம் சந்திப்போம்.

31, கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்

கண்ணீர் பூக்களால்
அஞ்சலி செய்யும்,
மனைவி - தாய்,
மகள் - சகோதரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு சகோதரர்களுக்குத் தியாக்கோன் பட்டம்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் குருத்துவப் பயிற்சியை நிறைவு செய்த நான்கு அருட்சகோதரர்களுக்கு யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தியாக்கோன் பட்டத்தினை 27.11.99இல் வழங்கவுள்ளார். சகோதரர்கள் எம்.எச். ஞானேந்திரன், ஜே.பி. ஜோதிநாதன், எம்.ஏ. அமலதாஸ், ஜே.நிக்ஸன் டொரக்ஸ் ஆகிய நால்வருமே தியாக்கோன் பட்டத்தினை பெறவுள்ளனர்.

## இறையியல் கோலங்கள் பொதுநிலையினர் சிறப்பிதழ்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருள்திரு ஜே. நீக்கிலஸ் அடிகளை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இறையியல் கோலங்களின் புரட்டாசி 99 இதழ் பொதுநிலையினர் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. தமது ஆசிரியர் உரையில் "இவ்விதழில் வெளிவரும் கட்டுரைகளில் பொதுநிலையினரின் பணி முக்கியமான பணி என்பதைக் காணக்கூடியதாயுள்ளது. பங்கேற்கும் திருச்சபையின் உறுப்பினராக பொதுநிலையினர் பல பொறுப்புக்களை ஏற்கும் பக்குவமுடையவர்களாய் முன்னிற்பது இக்காலத்தின் தேவைகளில் அவசியமாகிறது" என அருள்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

## திருமணத்துக்கு கட்டாயப் பயிற்சிநெறி

யாழ் மறைமாவட்ட குடும்ப வளத்துணை நிலையமான "அகவொளி" நிலையத்தில் திருமணப் பயிற்சிநெறிகள் ஒவ்வொரு மாதத்திலும் கடைசி ஞாயிறு தினத்தில் நடைபெறுவதை அனைவரும் அறிவர். ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி நடைபெற்ற குருக்களின் 'செனற்' மன்றத்தில் இயக்குனர் அருள்திரு எஸ்.ஜே.இராஜநாயகம் அடிகள் மேற்படி பயிற்சியை திருமணம் செய்யவிருக்கும் அனைவருக்கும் கட்டாய பயிற்சியாக்கும்படி ஆயரிடம் வேண்டுகோள் விடுத்தார். அதனை ஏற்றுக்கொண்ட ஆயர் இந்தப் பயிற்சிநெறியை எமது மறைமாவட்டத்தில் திருமணம் செய்யவுள்ள அனைவருக்கும் ஒரு முன்நிபந்தனையாக்கவேண்டும் என்றும், பங்குத்தந்தையர்கள் இதில் விசேட கவனம் செலுத்தும்படியும், திருமண ஆயத்தத்திற்காக பங்குக்குருவிடம் வருகின்றபோது "அகவொளி" நிலையத்தால் வழங்கப்படுகின்ற சான்றிதழை வைத்திருக்கிறார்களா? என்பதைக் கவனிக்கும்படியும் வேண்டுகோள் விடுத்தார்.

# வடமராட்சி மீனவர்களுக்கு கட்டுமரம் வழங்கும் நிகழ்வு

"கியூடெக்", "கபேட்" இணைந்து மீனவர்களுக்கு உதவிவழங்கும் திட்டத்தின் கீழ் அண்மையில் பருத்தித்துறை சக்கோட்டை புனித சவேரியார் ஆலய முன்றலில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் வடமராட்சியின் சில பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு ஆறு கட்டுமரம் வழங்கப்பட்டது.

இவ்வைபவத்தின்போது கியூடெக் இயக்குனர் அருள் திரு ஜெயக்குமார் அடிகளாரும் பருத்தித்துறை பங்குத்தந்தை பி.எம். இம்மானுவேல் அடிகளாரும் பெருந்தொகையான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

ஆயர் அவர்கள் தமதுரையில் "கியூடெக் நிறுவனம் இவ்வளவு காலம் செய்துவந்த பணிகளுடன் மக்கள் மற்றவர்களின் கையை எதிர்நோக்காது தமது சொந்தக்காலில் நிற்கக்கூடியவகையில் தொழில் வளங்களை ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் பாராட்டக்கூடியதாகவும், எமக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் அமைந்துள்ளது" என்று கூறினார்.



## தாளையடியில் குருத்துவ வெள்ளி விழா

ஐப்பசித் திங்கள் பதினோராம் நாள் தாளையடிப் பங்கு தனது மண்ணின் மைந்தன் அருள்தந்தை பே.இருதயநாதன்(அ.ம.தி) அவர்களுக்கு விழாவெடுத்தது. இந்த வெள்ளி விழா நிகழ்ச்சிக்கு பெருந்தொகையான குருக்களும் கன்னியர்களும் பொதுமக்களும் வருகை தந்திருந்தனர்.

பிரகாசமான காலைப் பொழுதில் விழாநாயகர் மேளதாளங்களுடன் பவனியாக அழைத்து வரப்பட்டார். அன்று மறையுரையாற்றிய அ.ம.தி யாழ் மாகாணத் தலைவர் அருள்திரு ஜீவாபோல் அடிகளார் "எரியாத திரிகளால் பயன் ஏதும் இல்லை" என்ற தமது நிறுவுனர் புனித இயூஜின் டி மசனட் அவர்களின் அறிவுரையை நினைவூட்டி, வெள்ளிவிழா நாயகரின் வாழ்வையும், பணியையும், பண்புகளையும் எடுத்துரைத்தார்.

திருப்பலியைத் தொடர்ந்து கோவில் முன்றலில் பங்குத்தந்தை அருள்திரு ஜோசப் பிரான்சிஸ் அவர்களது தலைமையில் நடைபெற்ற வரவேற்பின்போது யாழ் மாகாணத் தலைவர், குருமுதல்வர், மறைக்கோட்ட முதல்வர், தாளையம்பதியின் முதற்குரவரான புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர், இன்னும் பல பெரியார்கள் விழா நாயகரது பணியின் சிறப்பைப் பாராட்டி, அவரை வாழ்த்தினர்.

வெள்ளிவிழா மலர் குருமுதல்வரால் வெளியிடப்பட்டது. இசை, நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இறுதியில் பங்குச் சபையின் செயலாளரினால் நன்றியுரை வழங்கப்பட்டது.

(க. மரியநாயகம். தாளையடி நிருபர்)

### கடந்த . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் "உள்ளக் களிப்புடைய குடிகளாக எமது சிறார்கள் கல்வி பெறுவதற்கேற்ற சூழலை உருவாக்கும் அளவிற்கு எமது கரங்கள் இரத்தக் கறை படியாத கரங்களாகவும் எமது உள்ளங்கள் காழ்ப்புணர்வற்ற உள்ளங்களாகவும் தூய்மைப்படுத்தப்பட்டவர்களாக நாம் புதிய தசாப்தத்தினுள், புதிய நூற்றாண்டினுள் நுழைய வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

### ஜனாதிபதிக்கு . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அம்மகஜரில், புதுக்குடியிருப்பில் நடந்த சம்பவத்தையும் 09.07.95இல் நவாலி புனித இராயப்பர் தேவாலயத்தில் நடந்த நிகழ்வையும் ஒப்பிட்டது வருத்தத்திற்குரியதாகும். இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின் போது வட்டுக்கோட்டை, மூளாய், காரைநகர் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் ஆலய வளவினுள் இளைப்பாறிய போதே 120 பேர் விமானக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டனர், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தினுடைய சேதங்களைப் பற்றி விபரிக்காது அதில் இறந்த மக்கள் தொகையே செய்தி ஊடகங்களில் குறிப்பிடப்பட்டது. ஒரு தனி சம்பவத்தில் அதிக பொதுமக்கள் கொல்லப்பட்டது இதுவேயாகும். அமைச்சரும் மற்றைய பலரும் இந்த சம்பவத்தை ஆரம்பத்தில் மறுத்து ஆலயத்தின்மேல் குண்டுவீசப்படவில்லை என்று தெரிவித்தனர். ஆலயத்தின்மீது நேராக குண்டு வீசப்படவில்லையென்றாலும் குறிப்பிட்டளவு சேதத்திற்கு அது உள்ளானது. அதிக தொகையான மக்கள் ஆலய வளவினுள் தஞ்சம் புகுந்தபோது கொல்லப்பட்டதே உலகெங்கிலுமுள்ள மக்கள் மனதை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

மாண்புமிகு ஜனாதிபதியாகிய தாங்கள், தேசியரீதியிலும் சர்வதேச ரீதியிலும் சமாதானத்திற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் இந்த நேரத்தில் அமைச்சர் எம் மனதில் இன்னும் நிறைந்திருக்கின்ற இக்கொடூர சம்பவத்தின் காயங்களை திறந்துவிட்டிருப்பது குற்றத்துக்குரியதாகும், என்று அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தற்கொலை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தையும், மனிதர்களுக்கிடையான தொடர்பாடலையும், மனித உள்ளத்தையும் நடத்தையையும் பண்படுத்த விளையாட்டு முக்கியம் என்ற மூன்று கருத்துக்களை அவர் வலியுறுத்தி உரையாற்றினார்.

அண்மையில் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் பார்வையாளர் கூட்டத்தினரில் ஒரு பகுதியினர் கட்டுக்கோப்பை மீறி, விளையாடிய மாணவர்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடும் எனும் அபிப்பிராயம் நிலவியதையும், நிலைமையை அதிபர்களின் தலையீடு சுமூகமாக்கியதையும் அவர் தமதுரையில் சுட்டிக்காட்டினார்.

"எங்களால் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாது. மற்றவர்களுடைய மாறுபட்ட கருத்துக்களை சகித்துக்கொள்ள முடியாது. குறைந்த மதிப்பீட்டைப் பொறுத்துக் கொள்ள இயலாது என்ற மனநிலைகளோடு நாம் வளர்ந்து வருகின்றோம். இதன் தொடர்கதையாகவே தற்கொலை மரணங்கள் ஏற்படுகின்றன. பெற்றோர் ஆசிரியர்கள் என்ற வகையில் இந்நிலையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரவேண்டிய ஒரு பெரும் பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளது. மாணவர்கள் தோல்வியை புன்முறுவலுடன் ஏற்று அடுத்த முறை வெற்றிபெற, கடுமையாக உழைக்கவேண்டுமென்ற மனப் பாங்கை பெற்றுக்கொள்ளும் நிலை வளரவேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## குணமாக்கல் வழிபாடு

ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி முதல் (பு.நே.) நாவற்குழி அற்புத மாதா ஆலயத்தில் (நாவற்குழிச் சந்திக்கருகில்) குணமாக்கல் வழிபாடு அருள்தந்தை லோறன்ஸ் அடிகளாரால் நடாத்தப்படும்.

## மன்னாரின் சர்வமத சஞ்சிகை

மன்னாரிலிருந்து வெளிவரும் சர்வமத சஞ்சிகையாகிய அன்புமயம் சஞ்சிகையின் ஆடி-புரட்டாதி இதழ் வெளிவந்துள்ளது. "மனிதத்தைத் தேடி தெய்வத்தைத் தரிசிப்போம்", "இஸ்லாத்தில் மனித உரிமைகள்" ஆகிய கட்டுரைகளையும் பிற அம்சங்களையும் தாங்கிவரும் இந்த இதழ் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் அருட்திரு டேவிட் வி. பற்றிக் அ.ம.தி. ஆவார்.

## கிறிஸ்தவ நாகரிகத்துறைக்கு புதிய கட்டடம்

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையினர் புதிய கட்டடத்தில் இயங்கத்தொடங்கியுள்ளனர். கைலாசபதி கலையரங்கிற்கு அருகில் அமைந்துள்ள மேற்படி கட்டடத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறை விரிவுரையாளர்களுக்கென அறைகளும், விரிவுரை மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## 'மன ஓசைகள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

அன்ரனி பீற்றர் (அபீர் ராஜன்) என்பவருடைய "மன ஓசைகள்" என்னும் கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. பலாலி ஆசிரியக் கலாசாலை நடாத்தும் முத்தமிழ் விழாவின் இரண்டாவது அமர்வில் மேற்படி கவிதைத் தொகுதி நூலை கவிஞர் சோ. பத்மநாதன் வெளியிட்டு வைத்தார்.

## "புதிய உலகம்" கவிதைப் போட்டி முடிவுகள்

"புதிய உலகம்" கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சி வெள்ளிவிழா ஆண்டின் ஆயிரமாவது மலர் நிறைவதை முன்னிட்டு அனைத்திலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதற்பரிசினை எ.மே. முகைதீனும்(மூதூர்), இரண்டாம் பரிசினை பெக்ஸ் ரவீந்திரக்குமாரும் (மட்டக்களப்பு) மூன்றாம் பரிசினை முகமட் கான் நௌபீக் (காரைதீவு)கும் பெற்றுக் கொண்டதாக இணைப்பாளர் மலர்வேந்தன் பாதுகாவலனுக்கு அறியத்தந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197